இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அனைத்துக்கும் வாழ்வளிக்கும் கடவுளின் முன்னிலையிலும், பொந்திய பிலாத்துவின் முன் விசுவாசத்தைச் சிறப்பாக அறிக்கையிட்ட இயேசு கிறிஸ்துவின் முன்னிலையிலும் உனக்குக் கட்டளையிடுகிறேன். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தோன்றும் வரையில் குறைச் சொல்லுக்கு இடந்தராமல் இந்தக் கட்டளையை அப்பழுக்கின்றிக் கடைப்பிடித்து வா. உரிய காலத்தில் பேரின்பக் கடவுள் அவரைத் தோன்றச் செய்வார். கடவுள் ஒருவரே வேந்தர், அரசருக்கெல்லாம் அரசர், ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர்.
*(1 திமொ 6: 13-15)*

# இளையோர், மரியா போன்று விரைந்து சென்று பிறருக்கு உதவ வேண்டும்!

**வத்திக்கான்:** மற்றவருக்கு உதவிசெய்ய விரைந்து சென்ற அன்னை மரியாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுமாறும், வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணிக்குமாறும், உலக இளையோரைக் கேட்டுக்கொண்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கோவிட்-19 பெருந்தொற்று பரவலால் தள்ளி வைக் கப்பட்டு, பின்னர், 2023ஆம் ஆண்டில், போர்த்துக்கல் நாட்டு லிஸ்பனில் நடைபெற விருக்கும் 37வது உலக இளையோர் நாளுக்கென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள மூன்றாவது செய்தி, செப்டம்பர் 12, கடந்த திங்களன்று செய்தியாளர் கூட்டத்தில் வெளியிடப் பட்டது.

“**நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்**” (லூக்.1:38). என்ற தலைப்பில் 2019ஆம் ஆண்டில் பானமாவில் உலக இளையோர் நாள் நடைபெற்றதை நினைவுபடுத்தியுள்ள திருத்தந்தை, அந்நிகழ்வுக்குப்பின், ‘புறப்படு’ என்ற அறைகூவலோடு 2023ஆம் ஆண்டில், லிஸ்பனை நோக்கி நம் பயணத்தை மீண்டும் தொடங் கியுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.



கடந்த சில ஆண்டுகளாக உலக இளையோர் நாள் செய்தியில் பல்வேறு தலைப்புக்களில் சிந்தித்தோம், அவற்றில் “புறப்படு” என்ற சொல்லே பொதுவானதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, “மரியா புறப்பட்டு ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்” (லூக்.1:39) என்ற 37வது உலக இளையோர் நாள் கருப்பொருள், ஆழ்ந்த தூக்கத்திலிருந்து எழும்பி, நம்மைச் சுற்றியுள்ள வர்களின் வாழ்வு குறித்து விழிப்பாயிருக்க அழைப்புவிடுக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

இந்நாள்களில், மரியா போன்று அனைவரும், குறிப்பாக, இளையோர் அடுத்திருப்பவரைச் சந்திப்பதற்குப் புறப்பட்டுச் செல்லவேண்டும் என்று கூறியுள்ள திருத்தந்தை, பல இளையோருக்கு, 2023ஆம் ஆண்டு ஆகஸ்டில் லிஸ்பனில் கிடைக்கும் அனுபவம், அவர்களுக்கும், மனித சமுதாயம் முழுவதற்கும் ஒரு புதிய தொடக்கமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

### மரியா எழுந்தார்

வானதூதர் மரியாவுக்கு கிறிஸ்து பிறப்பு பற்றி அறிவித்தபின்பு, அவர் தன்மீது கவனம் செலுத் தியிருக்கலாம். மாறாக, அவர் தன்னை முழுவதும் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு, தன் வாழ்வில் கடவுளின் திட்டம் சிறந்ததாக இருக்கும் என்பதில் உறுதியாய் இருந்து, புறப்பட்டு பயணத்தை மேற்கொண்டார் என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

### புறப்பட்டு விரைந்து சென்றார்

மரியா விரைந்து சென்றது, பணியாற்ற அவர் கொண்டிருந்த ஆவலின் அடையாளமாக உள்ளது எனவும், உடனடித் தேவைகளை நாம் சந்திக்கும்போது விரைந்து சென்று உதவ வேண்டும் எனவும் கூறியுள்ள திருத்தந்தை, நலமான விரைவு, எப்போதும் மேல்நோக்கியும், மற்றவர் நோக்கியுமே நம்மை இட்டுச்செல்லும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அன்பு இளையோரே, இம்மாபெரும் செய்தியே திருஅவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், இயேசு நம்மீது வைத்துள்ள எல்லையில்லா அன்பால் மீட்பையும் புதிய வாழ்வையும் நமக்குத் தருகிறார் எனவும் திருத்தந்தை எடுத்தியம்பியுள்ளார்.

FABC GENERAL CONFERENCE
Journeying Together as Peoples of Asia

## 50வது ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பின் பேரவைக்கான இறைவேண்டல்

என்றென்றும் வாழ்த்தப்பெறுவதற்குரிய, எங்கள் தந்தையே! தம்முடைய பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பின் வழியாகவும் தூய ஆவியாரின் வல்லமையின் வழியாகவும் உம்மோடும் ஒருவர் மற்றவரோடும் ஒப்புரவாக உம்முடைய ஒரே பேறான மகனை அனுப்பினீர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பிறந்த ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பின் பேரவைக்காக உமக்கு நன்றிகூறி வாழ்த்துகிறோம். தெய்வீக முன்னுணர்வினாலும் தூய ஆவியாரின் வழிநடத்துதலினாலும் ஆசியாவில் உள்ள ஆயர்கள் சந்தப்பின் வழியாக, ஆசிய ஆயர்களின் கூட்டமைப்பின், பேரவையை உருவாக்கினார்கள். இந்த பரந்த கண்டமான ஆசியாவில், உள்ள உம்முடைய அன்பான மக்களுக்கு தன் அன்பின் பணியிலும் சேவையிலும் ஆசிய ஆயர்கள் கூட்டமைப்பின் பேரவை நிலை உறுதியுடன் இருப்பதாக!

எங்கள் குடும்பங்களின் நிலைத்தன்மையையும், இளைஞர்களின் கனவுகளையும், சுற்றுச்சூழலின் ஒருமைபாட்டையும், மேலும் மக்களின் பண்பாடு மற்றும் சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் அச்சுறுத்தும் சவால்களைச் சமாளிக்கவும் எங்களுக்கு உதவியருளும்.

திருஅவையின் அன்னையும், மறைபரப்பின் விண்மீனுமாகிய அன்னை மரியாவின் பரிந்துரை மற்றும் பாதுகாக்கும் தாய்மையின் வழியாக, ஆசிய ஆயர்கள் கூட்டமைப்புப் பேரவையின் 50-ம் ஆண்டு நிறைவு விழாவானது, ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், புலம்பெயர்ந்தோர், அந்நியர் மற்றும் சுயநலப்போக்கினால் சுரண்டப்படும் அன்னை பூமியின் புலம்பல் ஆகியவற்றைச் சீர்த்தூக்கிப் பார்த்து, நற்செய்திக்கு உயிரோட்டமும், வாழ்வும் அளிக்கும் மறைப்பரப்புக்கான புதிய வழியை பகுத்தறிந்து மேற்கொள்ள மிகவும் ஏற்ற தருணமாக அமைவதாக.

இந்த மன்றாட்டுகள் அனைத்தையும் உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் ஒரே இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்

## "இயேசு கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கைக்கு உறுதியான சாட்சி"

## திருத்தந்தை புகழாரம்

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ், பிரிட்டனின் புதிய மன்னரான மூன்றாம் சார்லஸ் மன்னருக்கு ஒரு தந்தி மூலம் மகாராணியார் "இயேசு கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கைக்கு உறுதியான சாட்சி" என்று பாராட்டுத் தெரிவித்தார்.

"நமது விண்ணகத் தந்தையின் இரக்கமுள்ள நற்குணத்திற்கு அரசியின் உன்னத ஆன்மாவைப் புகழ்ந்து, அரசராக நீங்கள் இப்போது உங்கள் உயர்ந்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதால், எல்லாம் வல்ல கடவுள்



*எலிசபெத் அரசியாருடன் திருத்தந்தை பிரான்சிஸ்*

அவரின் மாறாத அருளால் உங்களைத் தேற்றுவாராக’ என்று எனது இறைவேண்டலில் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

"உங்கள் மீதும், உங்கள் மறைந்த தாயாரின் நினைவைப் போற்றும் அனைவர் மீதும், இறைவனில் ஆறுதல் மற்றும் வலிமையின் உறுதிமொழி நிலைக்க இறைவனின் ஆசீருக்காக மன்றடுகிறேன்"

# மன நலப் பிரச்சனை நம்மில் பாகுபாடு காட்டாது!

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மறைமாவட்ட மனநல பணிக்குழு, செராஸ், புனித பிரான்சிஸ் அசிசி (SFA) பங்கில் ஒரு மாதத்திற்கு முன்னதாக, செப்டம்பர் 10 அன்று உலக மனநல தினத்தைக் கொண்டாடியது.

'சமத்துவமற்ற உலகில் மனநலம்' என்ற கருப்பொருளில் நாள் முழுவதும் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்ள சுமார் 370 பேர் பதிவு செய்திருந்தனர். இந்நிகழ்வில் முக்கிய அம்சங்களாக சொற்பொழிவுகள், பன்மொழி பட்டறைகள், ஒரு குழு விவாதம் மற்றும் எரிக் எரிக்சனின் எட்டு நிலை வளர்ச்சி பற்றிய கண்காட்சி ஆகியவை இடம்பெற்றன

மனநோய் யாரையும் பாதிக்கலாம், அது பாகுபாடு காட்டாது. நல்ல மன



ஆரோக்கியம் என்பது நல்வாழ்வைக் கொண்டிருத்தல் மற்றும் வாழ்க்கையின் சாதாரண மன அழுத்தங்களைச் சமாளிக்கும் திறனைக் கொண்டிருப்



கண்காட்சியைப் பார்வையிடும் இளையோர்

பதாகும். இது ஒருவர் தனது சொந்த வாழ்க்கையை எவ்வாறு உணர்கிறார் என்பதன் மூலம் அடையப்படுகிறது என்பது உணர்த்தப்பட்டது.

மனநல விழிப்புணர்வில் தீவிர அக்கறைக்காட்டி வரும் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள், மேற்கண்ட நிகழ்வைத் தொடக்கி வைத்தார். இதய நோய்க்கு அடுத்தப்படியாக மலேசியர்களைப் பாதிக்கும் இரண்டாவது பெரிய உடல்நலப் பிரச்சனை மனநோய் என்று தனது தொடக்க உரையில் கூறினார். தொற்றுநோய்க்கு, மலேசியாவின் 33 மில்லியன் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்கள் மனநலப் பிரச்சினைகளின் அறிகுறிகளை எதிர் கொண்டுள்ளனர் என்றும், இன்னும் 20 ஆண்டுகளில், நாட்டில் மனநலப் புள்ளிவிவரங்கள் மும்மடங்காகி, 2030ல் பொருளாதாரத்தை 25 டிரில்லியன் ரிங்கிட் வரை பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் கருத்துரைத்தார்.

"எப்போதையும் விட, நாம் மன ஆரோக்கியத்தை உலகளாவிய முன்னுரிமையாக மட்டுமல்லாமல், நமக்குரியதாகவும் கருத வேண்டும். இது நம்முடன் தொடங்குகிறது மற்றும் முடிகிறது. எனவே அனைவரும் இதற்கான தீர்வின் ஒரு பகுதியாக இருப்போம் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

FABC GENERAL CONFERENCE
Journeying Together as Peoples of Asia

## ஆசிய ஆயர்களின் பேரவைகளது கூட்டமைப்பு
## (Federation of Asian Bishops Conference, FABC)
## 50ம் ஆண்டு நிறைவு பொன் விழா
## கட்டுரை: ஆர்.கே.சாமி (பகுதி 2)

ஐரோப்பாவிலிருந்து கிறித்தவ மறைபரப்பாளர்கள், குறிப்பாக பிரான்சிஸ்கன் சபை, தொமீனிக்கன் சபை, இயேசு சபை போன்ற துறவற சபைகளைச் சார்ந்த அருள்பணியாளர்களும் சபை உறுப்பினர்களும் ஆசிய நாடுகளுக்குக் கிறித்தவத்தைக் கொண்டு வருவதில் வெற்றிப்பெற்றார்கள்.

**ஆசியா**

கடந்த ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு (18ஆம் நூற்றாண்டில்) மறைபரப்பாளர்கள் பிலிப்பீன்ஸ் நாட்டில் ஆக்கரமாக மறைப்பரப்பு செய்தனர். கொரியாவுக்கு கத்தோலிக்க திருஅவை சீனாவிலிருந்து 1784இல் பொதுநிலையினரால் கொண்டுவரப்பட்டது. ஏறக்குறைய 50 ஆண்டுகளாக இப்பகுகுதியில் திருஅவை குருக்களின்றி செயல்பட்டதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

16-ம் நூற்றாண்டில், தெற்கு ஆசியாவுக்கு புனித பிரான்சிஸ் சேவியரின் வருகையும் இதர மறைப்பரப்பாளர்களின், கிறிஸ்த வணிகர்களின் வருகையும் ஆசியாவில் கிறிஸ்தவம் தடம்பதிக்க ஏதுவாக இருந்தது. அத்தோடு இங்கு இருந்த காலணித்துவ ஆட்சியும் (ஐரோப்பியர்களின் ஆட்சி) கிறிஸ்தவத்திற்குப் பக்கபலமாகத் திகழ்ந்தது என்றால் மிகையாகது. அதாவது "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத் 28:19) என்ற இயேசுவின் கட்டளையை ஏற்று ஆக்கப்பூர்வமாகவும் ஒரே குறிக்கோள் கொண்டவர்களாகவும் செயல்பட்டார்கள். ஆனாலும், திருஅவையின் துரித செயல்பாட்டினால், ஒரு தவறான புரிந்துணர்வும் தென்பட்டது. அதாவது, பிற சமயத்தவர் மத்தியில் உண்மை இறைவன் இல்லை என்ற எண்ணமும் போதனையும் வலுவுற்றிருந்தது.

மேலும், ஆசியாவில் அன்று நிலவிய காலணித்துவ முறைமைகள், பழக்க வழக்கங்கள் என பலவற்றோடு தொடர்பு கொண்ட கிறிஸ்துவம் ஒரு மேற்கத்திய இறக்குமதி சமயமாக தோன்றியது அதன் பலவீனமாக மாறியது எனலாம். சில ஆசியா நாடுகளில் கிறிஸ்தவமானது **'வெள்ளைக்காரன் சமயம்'** என்றும் அழைக்கப்படலாயிற்று. ஆகவே, பொதுவாக ஆசியா நாடுகளில் கிறிஸ்தவம் ஓர் இறக்குமதி சமயமாகக் கருதப்பட்டது.

ஆனால், கடவுளின் நோக்கமும் அனுகுமுறையும் அதுவல்ல. ஆகவே, 1962 முதல் 1965 வரை நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் ஆசியா திருஅவையில் சிந்தனை புரட்சிக்கு வித்திட்டது. 'காலத்தின் குறிகளைத் துழாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலத்திலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமை' (இன்றைய உலகில் திருஅவை, எண் 4) என்று திருஅவைக்கு ஒரு புதிய திசை சங்கம் வெளிப்படுத்தியது. இதற்கேற்ப திருத்தந்தையரின் மற்றமுஆயர்களின் போதனையிலும், வலிவுறுத்தலிலும், திட்டங்களிலும் மாற்றங்கள் மிளர்ந்தன.

ஆசியாவின் இரு பெரும் பகுதிகளான இந்தியாவிலும் சீனாவிலும் திருஅவை தடம் பதித்தது ஒரு பெரும் சாதனை என்று கூறினால் மிகையாகது. ஆசியா மக்களுக்கு இயேசு யார்? என்பதை வெளிப்படுத்தவும், அவர்களின் மீட்புக்காகவும் குறிப்பாக, இப்பகுதியில் உள்ள ஏழைகள், ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டோர், உரிமையிழந்து தவிக்கும் பூர்வீக குடிகள் மற்றும் பலவகை அவநம்பிக்கைகளால் சிறைபட்டோர் ஆகியோரையும் மீட்டெடுக்க வந்தவர் தான் இயேசு என்பதை எடுத்துரைக்க விழைந்தனர். தூய ஆவியானவர் மறைபரப்புக்குத் துணைநின்றார். அதே வேளையில் கிழக்காசியா பகுதிகளில் சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் மறைபரப்பு வலுபெற்றது.

ஆனாலும், ஆசியாவின் பெரும்பகுதிகளில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

*தொடரும்*

# ஏழையரின் உள்ளத்தோரே பேறுபெற்றோர்'!

இன்று ஆண்டின் 26ஆம் ஞாயிறில் இணைந்துள்ள நம்மை, இன்றைய வாசகங்கள் அனைத்தும் செல்வத்தைப் பற்றியும் அதனை மனிதர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்றும் சிந்திக்க அழைக்கிறது. ஆமோஸ் இறைவாக்கினரின் கூற்றிலிருந்து, செல்வத்தில் திளைத்துக் கடவுளை மறந்துபோன மக்களுக்கு கடவுள் எச்சரிக்கை விடுக்கின்றார். இப்போது செல்வத்திலும், கொழுத்த உணவிலும், ஆடம்பர வாழ்விலும் ஈடுபட்டு, இறைவனை மறந்தவர்களுக்கு நிச்சயமாக அழிவு உண்டு என்று கூறுகிறார்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் பொருள் ஆசையிலிருந்து தப்பித்து ஓடு. நம்பிக்கையைப் பற்றிக்கொள்; குறைசொல்லாதவாறு அனைத்தையும் கடைப்பிடி. இவ்வாறு செய்தால் உரிய காலத்தில் கடவுள் உனக்கு நிறைவாழ்வு அளிப்பார் என்று கூறுகிறார். இன்று நாம் காணும் லூக்கா நற்செய்தியில் மற்ற நற்செய்தியாளர்கள் எடுத்துக்கூறாத ஓர் உவமையைக் காண்கிறோம். இதில்தான் செல்வரும் ஏழையும் கடவுளின் பார்வையில் எவ்வாறு பார்க்கப்படுகின்றனர் என்ற புதியதொரு பரிமாணத்தைப் பார்க்கின்றோம். தன் வீட்டுவாயிலருகே இருந்த ஏழையை ஏறெடுத்தும் பாராமல் ஒரு செல்வந்தன் தான் மட்டுமே செல்வ செழிப்பை அனுபவித்திருந்ததை வாசிக்கிறோம்.

இறைவன் நமக்கு அளிக்கும் அனைத்து வளங்களும் செல்வங்களும் அவருடைய ஆசீராலும் தயவாலும் நமக்குக் கிடைக்கப்பெற்றவை. இயேசுவும் இதைப் பலமுறை பல உவமைகளின் வழியாக நமக்குக் காட்டியுள்ளார். செல்வர் தான் வைத்திருந்த செல்வத்தின்மீது பற்று வைத்து வாழ்ந்ததால், அது அவருடைய கண்ணை மறைத்து. தன் வீட்டுக்கு முன்னம் இருந்த இலாசரைக் காணவிடாமல் செய்தபோது, இலாசரோ 'ஆண்டவரே என் உதவி' என்ற தன்னுடைய பெயர்க்கு ஏற்றாற்போல்போல் தன்னுடைய வறிய, நோய்வாய்ப்பட்ட நிலையிலும் ஆண்டவர்மீது பற்றுக்கொண்டு கொண்டு வாழ்ந்து வந்தார்.

இன்று நம் வாழ்வை சற்று எண்ணிப் பார்ப்போம். கடந்த இரண்டரை ஆண்டுகளில் தொற்றுநோய்க் காலத்தில் நாம் பார்த்த எண்ணற்றக் காட்சிகள் நம் கண் முன்னே வந்துபோகும். அதில் செல்வரும் ஏழையும் ஒன்றாகவே பல நேரங்களில் துன்புற்றனர். பலநேரங்களில் நாம் பிறருக்கோ அல்லது நமக்குப் பிறரோ உதவாத நிகழ்வுகளை எண்ணிப் பார்ப்போம். செல்வந்தரைப் போல நமக்கு உதவி செய்ய, பிறர் கண்ணீர் துடைக்க, பசியாற்ற, உடை உடுத்த, பிறரின் கண்ணீர்க்கதைக் கேட்டு ஆறுதல் கொடுக்க எண்ணற்ற வாய்ப்புகள் இருந்திருக்கும். அவற்றை நாம் சரியாகக் கண்டுகொண்டு, கனிவும், உதவியும் தந்திருக்கின்றோமா?

மாந்தர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவர்க்குக் கிடைக்கும் பயன் என்ன?" (மத் 16: 26) என்று இயேசு கேட்டார். ஆகையால், நாம் செல்வத்தின் மீது பற்று வைத்து வாழ்வைத் தொலைக்காமல், ஆண்டவர்மீது பற்று வைத்து வாழ்வைப் பெற முயற்சிப்போம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின் பொதுக்காலம் 26-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | ஆமோஸ் 6:1, 3-7 |
| தி. பாடல்: | 146: 7. 8-9a. 9bc-10 |
| 2ம் வாசகம்: | 1திமொ 6: 11-16. |
| நற்செய்தி: | லூக்கா 16: 19-31 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**